# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 203/ந/2024
நாள். 29.05.2025

Ms. பா. இந்துமதி, – முறையீட்டு மனுதாரர்
ஆற்காடு, ராணிப்பேட்டை மாவட்டம்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, ராணிப்பேட்டை மாவட்டம் – எதிர்மனுதாரர்

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, கஸ்பா, புதுப்பேட்டை தெரு, எண்.6/16 என்கிற முகவரியில் வசிக்கும் Ms. பா. இந்துமதி என்பவரின் 03.10.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2024 அன்று பெறப்பட்டு, 203/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, கஸ்பா, புதுப்பேட்டை தெரு, எண்.6/16 என்கிற முகவரியில் வசிக்கும் Ms. பா. இந்துமதி என்பவர் தனது 03.10.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார் தெரிவித்துள்ளார்:

"நான் ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணி செய்யும் தனியார் ஒப்பந்த நிறுவனமான JP VINCIPLE நிறுவனத்தின் கீழ் தூய்மைபணி மேற்பார்வையாளராக பணி புரிந்து வந்தேன். நான் மட்டுமில்லாமல், எனது தாயார் தூய்மை பணியாளராகவும், எனது தம்பி ஓட்டுனராகவும் பணி புரிந்து வந்தோம். மேற்கண்ட நிறுவனம் எங்களுக்கு மட்டுமில்லாமல் நகராட்சியில் பணி புரியும் அனைத்து பணியாளர்களுக்கும், சரியான முறையில் வருங்கால வைப்பு நிதி மற்றும் சேம நல நிதியினை செலுத்தவில்லை. இதனை JP VINCIPLE நிறுவனத்திடம் கேட்டதற்கு, உங்கள் PF கணக்கில் PF தொகையினை செலுத்தி விட்டோம் என்று கூறியதன் பெயரில் நான் EPFO ஆன்லைனில் என்னுடைய UAN எண்ணினை பதிவு செய்து பார்த்ததில், மேற்கண்ட நிறுவனம் எனக்கும், என்னுடன் பணிபுரியும் நபர்கள் யாருக்கும் PF செலுத்தவில்லை என்பதை உறுதி செய்து கொண்டேன். மேற்கண்ட நிறுவன்ம் ஆற்காடு மட்டுமில்லாமல் விஷாரம், திருத்தணி ஆகிய நகராட்சிகளிலும் இதே போன்று பணியாளர்களுக்கு PF மற்றும் ESI தொகையினை சரியான முறையில் செலுத்தவில்லை என்பதை நான் RT1 போட்டு அறிந்துகொண்டேன். மேலும், இந்நிறுவனம் PF பில்களை போலியாக தயாரிப்பது அவர்கள் பணி. இந்நிறுவனம் PF பில்களை போலியாக தயாரித்து, அவர்கள் பணி செய்யும் இடங்களில் (ஆற்காடு, விஷாரம், மற்றும் திருத்தணி) நகராட்சிகளில் செலுத்தி பில்

பட்டியல்களை பெற்றுள்ளனர். ஆற்காடு நகராட்சியில், துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர், மற்றும் ஆணையாளர் ஆகிய அதிகாரிகளின் துணையுடன் போலியான பில்களை அளித்து மாதந்தோறும், பில் பட்டியல் பெற்றுள்ளனர். இவ்வாறாக, தூய்மை பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய PF மற்றும் ESI தொகையினை முறையாக செலுத்தாத JP VINCIPLE நிறுவனம் மீதும் அதன் உரிமையாளரான திரு. நாகராஜன் அவர்கள் மீதும் சட்டப்படியான நடவடிக்கை எடுத்து போலியான பில்களை ஆய்வு செய்து, மேற்கண்ட JP VINCIPLE நிறுவனம் எந்த விதத்திலும் பணி செய்யாத வண்ணம் JP VINCIPLE நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் இட்டு, தூய்மை பணியாளர்களின் வாழ்வை காத்து எங்களுக்கு சேர வேண்டிய PF மற்றும் ESI தொகையினை பெற்றுத் தருமாறும் கேட்டுக்கொள்வதுடன், மேற்கண்ட நிறுவனத்திடம் இணைந்து ஊழல் புரிந்துள்ள நகராட்சி அதிகாரிகளின் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

**2.** மனுதாரரது புகார் மனு குறித்து ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 07.11.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

**3.** ஆற்காடு நகராட்சி ஆணையர் தனது 18.11.2024 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 2025/2022/எச்1 –ல் கீழ்க்கண்டவாறு விவரங்களை தெரிவித்துள்ளார்.

“அரசாணை எண். (நிலை) 116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 24.08.2022–ல் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் வெளிக்கொணர்வு முகமை மூலம் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி ஒப்பந்தப்புள்ளி கோரி M/s. JP Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனத்திற்கு ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணிகளை மேற்கொள்ள பணி உத்தரவு 23.05.2023 அன்று வழங்கப்பட்டுள்ளது. M/s. JP Vinciple, காஞ்சிபுரம் என்ற நிறுவனம் 01.06.2023 முதல் ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்ட விதிமுறைகளின்படியும் வெளிக் கொணர்வு முகமை நிறுவனத்திடம் மேற்கொண்ட ஒப்பந்த நிபந்தனைகள்படியும் இந்நிறுவனம் 143 தூய்மைப் பணியாளர்களையும், 15 ஓட்டுனர்களையும் மற்றும் 7 துப்புரவு பணிமேற்பார்வையாளர்களையும் வழங்க வேண்டும். திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள நியமனம் செய்யப்படும் ஒப்பந்ததாரருக்கு மாதாந்திர ஊதியப்பட்டியல் தொகை அரசால் நிர்ணயித்த KPI Norms படி வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இந்நிறுவனத்தால் தினந்தோறும் கையாளப்படும் குப்பைகளின் அளவுகோலை வைத்து பட்டியல் தொகை வழங்கப்படுகிறது. மேலும் இப்பட்டியல் தொகையில் 50% பில்பட்டியல் சமர்ப்பித்தவுடன் சரிபார்த்து வழங்கப்படுகிறது. மீதமுள்ள 50% தொகை வழங்கும் முன் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள், அதாவது 80% collection, 20% Segregation ஆகியவற்றை பரிசீலித்து துப்புரவு அலுவலர் அவர்களின் பரிந்துரையுடன் பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI ஆகியவற்றை உறுதி செய்த பிறகு வழங்கப்படுகிறது. இந்நிலையில் 50% தொகை முதலில் வழங்கப்பட்டும், மீதமுள்ள தொகையில் பணியாளர்களின் வருகை வாகனங்களின் பயன்பாடு, பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI சரிபார்க்கப்பட்டு, பணி குறைபாடுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, மீதி தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் வெளிக்கொணர்வு ஒப்பந்த பட்டியல் சரிபார்த்து, பிடித்தங்கள் போக மேற்படி நிறுவனத்தால் சமர்பிக்கப்பட்ட பட்டியல் தொகையில் 70% முதல் 80% தொகை மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிறுவனம் தினந்தோறும் 143 பணியாளர்கள், 15 ஒட்டுநர்கள் மற்றும் 7 மேற்பார்வையாளர்கள் வழங்க வேண்டும். இதில் எவரேனும் விடுப்போ, பணியாளர்கள் வரவில்லை எனில் மாற்று பணியாளர்களை நிறுவனத்தால் அனுப்ப வேண்டும். ஆகையால் நிறுவனத்தால்

நியமிக்கப்படும் பணியாளர்கள் தற்காலிக பணியாளர்கள் ஆவர். EPF, ESI ஆகிய பிடித்தங்கள் செய்து அந்தந்த துறைக்கு செலுத்த வேண்டியது இந்நிறுவனத்தின் பொறுப்பாகும்.

மனுதாரர் Ms. பா. இந்துமதி அவர்களின் புகார் தொடர்பாக M/s. JP Vinciple காஞ்சிபுரம் நிறுவனத்திடம் விளக்கம் கோரப்பட்டடு, இந்நிறுவனம் கீழ்க்கண்டவாறு தனது விளக்கத்தினை தெரிவித்துள்ளதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

"எங்கள் JP VINCIPLE நிறுவனத்தில், Ms. பா. இந்துமதி அவர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளர் 01.12.2023 முதல் 15.04.2024 வரை பணிபுரிந்து வந்தார். அப்பணிக் காலங்களில், அவர் பணிக்கு சரிவர வரவில்லை மற்றும் அந்த தனி நபருக்கு ESI மற்றும் EPF செலுத்த தேவையான ஆவணங்கள் எதுவும் இதுவரை தரவில்லை. மேலும் எங்கள் நிறுவனத்தில் நடந்த பல பிரச்சனைகளுக்கு காரணமாக இருந்தார். அதைப்பற்றி விளக்கம் கேட்டதற்கு எங்களிடம் எவ்வித தகவலும் இன்றி பணியில் இருந்து நின்று விட்டார். திருமதி. ராஜேஷ்வரி இந்துமதியின் தாயார் அவர்கள் 01.06.2023 முதல் 31.08.2024 வரை எங்கள் நிறுவனத்தில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்தார். அவருக்கு செலுத்த வேண்டிய ESI மற்றும் EPF செலுத்தியுள்ளோம். மற்றும் அவருடைய UAN No.102013060949 என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. பாண்டியன் (இந்துமதியின் தம்பி) அவர்கள் 01.07.2024 முதல் 31.08.2024 வரை துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்தார். அவர் பணிபுரிந்து வந்த நாட்களில் பணிக்கு முறையாக வருவதில்லை. அவரும் இந்நாள் வரை எந்த ஆவணமும் சமர்ப்பிக்கவில்லை. தனிநபர்கள் Ms. பா. இந்துமதி மற்றும் அவர்களின் தம்பி திரு.பாண்டியன் அவர்கள் சரியான ஆவணங்கள் சமர்பித்த உடன் அவர்களின் ESI மற்றும் EPF கணக்கை தொடங்கி அவர்களின் கணக்குகளில், அவர்கள் பணிபுரிந்த காலம் வரையிலான பணத்தை செலுத்தி விடுகிறேன்".

இந்நிலையில், மேற்படி நிறுவனம் புகார்தாரர் சரியாக பணிக்கு வரவில்லை எனவும், தனக்கு அளிக்கப்பட்ட பணிகள் முறைபடி செய்யவில்லை எனவும், EPF, ESI கணக்கு தொடங்க உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி புகார்தாரர் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் அவருக்குரிய EPF, ESI தொகை உரிய தலைப்பில் செலுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்" என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஆற்காடு நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்டதில் எந்த முறைகேடுகளும் நடைபெறவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாருக்கும், எதிர்மனுதாரருக்கும் 03.03.2025 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு 24.02.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் Ms. பா.இந்துமதி 03.03.2025 நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

"நான் ஆற்காடு நகராட்சியில் JP VINCIPLE நிறுவனத்தின் மூலம் தூய்மைப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்தேன்.

மேற்படி நிறுவனத்தில் பணியாற்றிய நான் உட்பட 165 பணியாளர்களுக்கு EPF/ESI பிடித்தம் செய்து, முறையாக வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் செலுத்தப்படவில்லை என்பதை UAN எண். பதிவு செய்து பார்த்ததில் தெரிந்து கொண்டேன். மேலும் போலியான பட்டியல் மூலம் EPF/ESI தொகை நகராட்சியிடமிருந்து JP VINCIPLE நிறுவனத்தால் பெறப்பட்டுள்ளது.

எனது தாயார் இதே நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வந்துள்ளார். இவ்விவரத்தினை தட்டிகேட்டதற்கு எனது தாயாரை பணியிலிருந்து நீக்கிவிட்டார்கள்.

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள் பெறும் மாத ஊதியமான ரூ.10,000/– த்தில் ரூ.1,000/– பிடித்தம் செய்து கொள்கிறார்கள்.

மேற்படி 165 பணியாளர்களுக்கான EPF/ESI தொகையினை செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளவும், இதுவரை EPF/ESI செலுத்த தவறிய அலுவலர்கள் மற்றும் நிறுவனத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ள இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக வழக்கறிஞர் மூலம் நகராட்சிக்கு அறிவிப்பு வழங்கியுள்ளேன் என்பதை பணிவுடன் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் தனது 27.02.2025 நாளிட்ட கடிதத்தில் 2024–25 ஆம் ஆண்டிற்கான மார்ச் மாதம் கடைசி மாத வரிகள் வசூல் பணி மற்றும் அலுவலக பணிகள் நிமித்தமாக தனக்கு பதிலாக துப்புரவு அலுவலரை விசாரணையில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து, நகராட்சியின் துப்புரவு அலுவலர் திரு. மு. பாஸ்கர் என்பவர் 03.03.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள JP VINCIPLE என்னும் நிறுவனம், இதுநாள் வரை EPF/ESI செலுத்தி, அதற்கான பட்டியல் விடுவிக்கப்பட்டுள்ளது, எனினும் மனுதாரரால் தெரிவிக்கபட்டுள்ள EPF/ESI செலுத்தாதது, மற்றும் போலி ரசீது தொடர்பாக அளிக்கப்பட்டுள்ள புகாரின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து, இது தொடர்பான பட்டியல்களை JP VINCIPLE நிறுவனத்திடமிருந்து பெற்று ஆய்வு செய்தும் EPF/ESI செலுத்தப்படாதபட்சத்தில் மேற்படி தொகையினை செலுத்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது சம்பந்தமாக ஆய்வு செய்திட மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பட்டியல் தொகையில் செப்டம்பர் 2023, அக்டோபர் 2023 மற்றும் நவம்பர் 2023 வரை 50% பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆகஸ்டு 2024 முதல் தற்போதைய பட்டியல் தொகை வரை 5% பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை, ஆணையரின் சார்பாக ஆஜரான ஆற்காடு நகராட்சி துப்புரவு அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் ஆற்காடு நகராட்சியில் தூய்மை பணி செய்யும் தனியார் ஒப்பந்த நிறுவனமான JP VINCIPLE நிறுவனத்தின் கீழ் தூய்மைப்பணி மேற்பார்வையாளராகவும், அவரது தாயார் தூய்மை பணியாளராகவும், அவரது தம்பி ஓட்டுனராகவும் பணி புரிந்து வந்துள்ள நிலையில் தனக்கும், தன்னுடன் பணிபுரியும் நபர்கள் யாருக்கும் PF செலுத்தவில்லை எனவும். தூய்மை பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய PF மற்றும் ESI தொகையினை முறையாக செலுத்தாத JP VINCIPLE நிறுவனம் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுத்து போலியான பில்களை ஆய்வு செய்து, மேற்கண்ட JP VINCIPLE நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் இடவும், மேற்படி நிறுவனத்துடன் இணைந்து ஊழல் புரிந்துள்ள நகராட்சி அதிகாரிகளின் மீதும் தகுந்த சட்ட நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

JP VINCIPLE நிறுவனத்தில், மனுதாரர் Ms. பா. இந்துமதி அவர்கள் துப்புரவு பணி மேற்பார்வையாளராக 01.12.2023 முதல் 15.04.2024 வரை பணிபுரிந்து வந்ததாகவும், பணிக் காலங்களில், பணிக்கு சரிவர வரவில்லை எனவும், மனுதாரருக்கு ESI மற்றும் EPF செலுத்த தேவையான ஆவணங்கள் எதுவும் இதுவரை தரவில்லை எனவும், நிறுவனத்தில் நடந்த பல பிரச்சனைகளுக்கு காரணமாக இருந்ததைப் பற்றி விளக்கம் கேட்டதற்கு, எவ்வித தகவலும் இன்றி

பணியில் இருந்து நின்று விட்டதாகவும், மனுதாரரின் தாயார் திருமதி. ராஜேஷ்வரி என்பவருக்கு 01.06.2023 முதல் 31.08.2024 வரையிலான பனிக்காலங்களுக்கான ESI மற்றும் EPF செலுத்தியுள்ளதாகவும், மனுதாரரின் தம்பி திரு. பாண்டியன் என்பவருக்கு 01.07.2024 முதல் 31.08.2024 வரை துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வந்த நாட்களில் பணிக்கு முறையாக வராமலும், எந்த ஆவணமும் சமர்ப்பிக்கமால் உள்ளதாகவும், மனுதாரர் Ms. பா. இந்துமதி மற்றும் அவரது தம்பி திரு.பாண்டியன் ஆகியோர் சரியான ஆவணங்கள் சமர்பித்த உடன் ESI மற்றும் EPF கணக்கை தொடங்கி அவர்கள் பணிபுரிந்த காலம் வரையிலான பணத்தை செலுத்திவிடுவதாக JP VINCIPLE நிறுவனத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கை வாயிலாக அறியவருகிறது.

மேலும், பட்டியல் தொகையில் 50%-க்கான தொகை பட்டியல் சமர்ப்பித்தவுடன் சரிபார்த்து வழங்கப்படுவதாகவும், மீதமுள்ள 50% தொகை வழங்கும் முன் நிறுவனத்தின் செயல்பாடுகள், அதாவது 80% Collection, 20% Segregation, பணியாளர்களின் வருகை வாகனங்களின் பயன்பாடு, பணியாளர்களுக்கு செலுத்தப்பட்ட EPF, ESI சரிபார்க்கப்பட்டு, பணி குறைபாடுகளுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதா போன்றவற்றை பரிசீலித்து துப்புரவு அலுவலர் அவர்களின் பரிந்துரையுடன் மீதி தொகை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு வருவது ஆற்காடு நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக அறியவருகிறது.

இந்நேர்வில்,

i) நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20496/2021/எம்3, நாள் 02.03.2022 ல் வரிசை எண். 19–ல் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் ஒவ்வொரு பட்டியலுக்கான தொகையும், ஒப்பந்ததாரர்கள் தன்னுடைய பணியாளர்களுக்கு சேமநலநிதி (EPF) உரிய கணக்கில் செலுத்தி அதற்கான உரிய ரசீது வழங்கப்பட்டதை உறுதி செய்தபின் வழங்கவேண்டும், தவறும்பட்சத்தில் ஒப்பந்ததாரர் EPF தொகை செலுத்தாததால் ஏற்படும் அனைத்து வழக்குகள் மற்றும் இழப்பீட்டிற்கும் நகராட்சி ஆணையர்களே பொறுப்பாக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஆற்காடு நகராட்சி சார்பில் நடந்த விசாரணையில் பங்கு பெற்ற நகராட்சி துப்புரவு அலுவலர், EPF/ESI தொடர்பான பட்டியல்களை JP VINCIPLE நிறுவனத்திடமிருந்து பெற்று ஆய்வு செய்தும் EPF/ESI செலுத்தப்படாத பட்சத்தில் மேற்படி தொகையினை செலுத்திட உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதன் விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துள்ளார். மேலும், பணியாளர்களுக்கு EPF/ESI செலுத்தப்பட்டதற்கான ஆதாரம் ஏதும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கபடவில்லை என்பதால் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்ட ஒப்பந்த பணியாளர்களுக்கான EPF/ESI தொகை பணியாளர்களின் கணக்கில் செலுத்தப்படுவது ஆற்காடு நகராட்சி ஆணையரால் உறுதி செய்யப்படவில்லை என்று இம்முறைமன்ற நடுவம் கருத நேருகிறது. எனவே, ஆற்காடு நகராட்சியில் ஒப்பந்த நிறுவனத்தின் கீழ் மனுதாரர் உட்பட பணியமர்த்தப்பட்டுள்ள அனைத்து பணியாளர்களுக்கும் EPF/ESI தொகை முறையாக செலுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்த உண்மை நிலையினை கண்டறியவும், இனிவரும் காலங்களில் பணியாளர்களுக்கான EPF/ESI தொகை முறையாக செலுத்தப்படுவதை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இதுவரை 02.03.2022 நாளிட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தின் சுற்றறிக்கை முறையாக பின்பற்றப்படாதபட்சத்தில், மேற்காணும் சுற்றறிக்கையின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையரின் மீது உரிய துறை நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

ii) மேலும், புகார் மனுவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு JP VINCIPLE நிறுவனம் போலி ரசீதுகள் சமர்ப்பித்து, அதனடிப்படையில் தொகைகள் வழங்கப்பட்டு, நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதா என்பதை **உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை** ஆய்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், அறிக்கையை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்குமாறும் இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சென்னை அவர்களை நடுவம் அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மே திங்கள் 29–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) Ms. பா. இந்துமதி,
6/16, புதுக்கோட்டை தெரு,
கஸ்பா, ஆற்காடு, ராணிப்பேட்டை மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, ராணிப்பேட்டை மாவட்டம்.

3) இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை,
பேராசிரியர் க. அன்பழகன் மாளிகை,
4வது தளம், நந்தனம், சென்னை –600035.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/5/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

7/8
385